**இலங்கை சுங்க அலுவலர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2024**

-------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுங்க அலுவலர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்று நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றன.

இவ்வறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதிக் கூற்றுகளின் ஊடாக 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன், முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதயத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுகள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்துக்களை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுகளில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டியதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருத்தல் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிதியத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளதா எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளதா எனவும், வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுதுறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொது துறை, கணக்கீட்டு நியம இலக்கம் 01 பிரகாரம் நிதிநிலை அறிக்கை அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படுதல் வேண்டு-மாயினும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் சுங்கத்துறையால் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாத மொத்த பெறுமதி ரூபா.4,800,470,461 ஆன நிலுவை அபராதம் மற்றும் பறிமுதல் தொகையில் இந்த நிதியத்திற்கு ஏற்புடையதாக 20% என்ற பெறுமதி அதாவது ரூபா.960,094,092 ஆன அபராதங்கள் மற்றும் பறிமுதல் தொகை ஏற்கனவே பெறப்பட்டிருந்தாலும், அன்பளிப்பு கோவைகள் தயாரிக்கப்படாத | அனைத்து அபராதங்கள் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனை வருவாய், சட்டப்பூர்வ கட்டணங்களுக்கான தற்காலிக பிடிபண வைப்பு கணக்கிற்கு (18/128) வரவு வைக்கப்படுகிறது. சில விசாரணைகள் முடிந்த பின்னர், சம்பந்தப்பட்ட அபராதத் தொகையை சம்பந்தப்பட்ட நபர்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றது. மேலும், இவ்வாறு வைப்புச் செய்யப்படும் பணத்திலிருந்து விசாரணைகளுக்-கான செலவினங்களையும் ஏற்க வேண்டியுள்ளது. எனவே, அந்தச் செலவினங்களைக் குறைக்கப்பட்ட பின்னர் மீதமுள்ள பணத்தை, சுங்கத் துறை அலுவலர்களின் அன்பளிப்பு நிதியத்திற்கு (50%), முகாமைத்துவ | இலங்கை பொது துறைக் கணக்-கீட்டு நியமங்க-ளுக்கு அமைவாக நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியில் நிதியத்திற்கான தொகை நிதியத்திற்கு கிடைக்கப்பெற வேண்டிய வருமானமாக காண்பிக்கப்படவில்லை. அதன்படி ஆண்டு இறுதி திகதியில் வைப்புத் தொகைகள் மூலம் கிடைக்கப்பெற வேண்டிய நிதி (அபராதங்கள் மற்றும் பறிமுதல் தொகைகள்) என நிதிநிலை அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி செவ்வையானதல்ல என்று அவதானிக்கப்பட்டது. | இழப்பீட்டு நிதிக்கு (20%) மற்றும் அரசு வருவாய்க்கு (30%) என்ற வகையில், விசாரணைக் கோப்பின் பணிகள் முடிவுறுத்தப்பட்டு அன்பளிப்பு கோவைக்கு கட்டணங்களை செலுத்தும் போது வரவு வைக்கப்படுகிறது. ஆகையால் கிடைக்கப்பெற வேண்டிய அபராத வருவாய் கணக்கு வைப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட தொகையை அடையாளம் காணுதல், உரிய விசாரணை முடிவடையும் வரை மேற்கொள்வதற்கு இயலாது என்பதால், மேற்படி விபரிக்கப்பட்ட அடிப்படையில் கணக்குகள் பராமரிக்கப்படுகிறது. | |
| (ஆ) | இலங்கை பொது துறை, கணக்கீட்டு நியம இலக்கம் 07 பிரகாரம், ஒவ்வொரு ஆண்டு அறிக்கை காலத்தின் முடிவிலும் ஒரு சொத்தின் மீதமுள்ள மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும், ஆயுதங்கள், நூலக புத்தகங்கள், கணினிகள், கணினி துணைக் கருவிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் ஆகியவற்றின் முழுமையாக தேய்மானம் அடைந்த செலவான ரூபா. 151,821,560 குறித்து அவ்வாறு செய்யப்படவில்லை. | செவ்வையாக்கி கொள்வதற்கு குறித்துக் கொண்டேன் | இலங்கை பொது துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும்.. |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1869 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுங்கச் சட்டத்தின் பிரிவு 153-இன் படி, பறிமுதல் செய்யப்பட்ட அபராத தொகைகள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை வருவாயிலிருந்து, சுங்க வெகுமதி நிதிக்காக 50% ம், நிர்வாக மற்றும் இழப்பீட்டு நிதிக்காக 20%ம் பங்களிக்கப்படுதல் வேண்டும். அதன்படி, அன்பளிப்பு நிதியின் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வருவாயாக அடையாளம் காணப்பட்ட 50% பங்களிப்பு ரூபா. 8,975,906,478 | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதற்கு இயலாது. ஆண்டின் அபராத மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை வருவாயிலிருந்து, சுங்க அன்பளிப்பு நிதியத்திற்கு 50% ஆன வருவாய்க்கு, 2024 ஆம் ஆண்டிற்கான அனைத்து கோவைகளுக்கும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தாலும், முந்தைய ஆண்டில் ஒரு பகுதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தால், அந்தத் தொகையைச் சேர்த்து, 2024 ஆம் ஆண்டின் | அபராதங்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை வருவாயில் 50% சுங்க அன்பளிப்பு நிதியத்திற்காக வரவு வைக்கும் போது, அதற்கு விகிதாசாரப்படி 20% இந்த நிதியத்திடம் வரவு வைக்கப்ப-டுதல் வேண்டும். |

| | |
|---|---|
| ஆக இருக்கும் போது, நிர்வாக மற்றும் இழப்பீட்டு நிதிக்கான 20% பங்களிப்பு ரூபா. 3,590,362,591 ஆக இருத்தல் வேண்டும். இருப்பினும், நிதிநிலை அறிக்கைகளில் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியின் வருவாயாக ரூபா. 3,413,660,135 காட்டப்பட்டுள்ளது. இதனால் வருவாயில் ரூபா. 176,702,456 வேறுபாடு காணப்படுகிறது. | பகுதி கொடுப்பனவு தொகையையும் ஏனைய வரவுகளையும் கழித்த பின்னர் கிடைக்கும் வருமானத்தில் 20% ஆன தொகை முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டுக் கணக்கிற்கான வருமானமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு கணக்கிடப்பட்ட தொகைக்கு, சுங்க முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு ஏனைய வரவுகளாகப் பெறப்பட்ட ரூபா. 455,841.32 தொகையை வருமானத்துடன் சேர்த்த பின்னர், ரூபா. 3,413,660,134.59 தொகை பெறப்பட்டுள்ளது. |

### 1.5.3 கணக்காய்விற்கு சான்றளிக்கப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்கள் இரண்டு தொகுதிகளின் கீழ், செலவினம் ரூபா.123,465,298 மற்றும் திரட்டிய தேய்மானமாகிய ரூபா 117,667,414 ஆன சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் நடைமுறை-யல்லாத சொத்துகளாக நிதி-நிலை அறிக்கையில் குறிப்பிட-ப்படினும், நூலகப் புத்தகங்கள் மற்றும் ஆய்வுகூட உபகர-ணங்கள் தவிர்ந்து ஏனைய சொத்துக்களை ஒப்பாய்வு செய்வதற்கு தேவையான நிலையான சொத்துக்களின் பதிவேடு, பொருட் ஆய்வு தொடர்பான அறிக்கைகள், வைக்கப்பட்டுள்ள இடங்கள் ஆகியன தொடர்பாக எந்தவொரு தகவல்களும் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | தங்களது PUR/B/CUS/INFO/2025/38 ஆம் இலக்க மற்றும் 2025.04.02 ஆம் திகதிய கடிதத்திற்கு பதிலாக எனது CUS/FMU/DL/DDC/01/13 ஆம் இலக்க மற்றும் 2025.04.12 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவித்துள்ள வகையில் நூலகத்திற்கும் ஆய்வு-கூடத்திற்கும் ஏற்புடையதான நிலையான சொத்துக்களின் பதிவேடு தங்களிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக கணக்கு கொடுக்கும் பொறுப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக உரிய கடிதங்கள் பராமரிக்கப்படுதல் வேண்டும். |

1.6 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவை | | | |
| (அ) | நி.பி 371 மற்றும் 2020ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 | நிமித்தக் கட்டுநிதி உரிய விசேட பணிக்கு அண்மித்த திகதியில் அலுவலரிடம் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அலுவலரால் அந்தப் பணியினை முடிவுறுத்தப்பட்டு 10 நாட்களுக்குள் அந்தக் பணத்தை தீர்க்கப்படுதல் வேண்டும். ஆயினும் சுங்கத் துறை அலுவலர்களின் முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்தில் 12 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா.5,000 தொடக்கம் ரூபா.700,000 வரையிலான எல்லைக்குள் காணப்பட்ட முற்பணம் தீர்ப்பதற்காக 12 தொடக்கம் 53 நாட்கள் கடந்திருந்தன. | மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவால் பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சி செயலமர்வுகளுக்காக முற்பணத் தொகை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதியில் பெற்றுக்கொள்ளப்படினும், குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் ஒரு மாதம் போன்ற காலம் முழுவதும் நடாத்தப்படுவதுடன் நிகழ்ச்சித்திட்டங்களில் இறுதி திகதியிலிருந்து தாமதமின்றி முற்பணம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பெற்றுக்கொள்ளப்படும் முற்பண தொகை உரிய நிகழ்ச்சித்திட்டம் முடிவடைந்தவுடன் தீர்ப்பதற்கு குறித்துக் கொண்டேன். | நிதிப˙ பிரமாணம் மற்றும் சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கு ஒழுங் கமைதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) நிதி பிரமாணம் 371(2) | ஏதேனும் விசேட பணிக்காக மட்டும் பதவிநிலை அலுவலர்களுக்கு மட்டும் ரூபா.100,000 ம் ஆன அதிகபட்ச வரம்பிற்கு உட்பட்டு, நிமித்தக் கட்டுநிதி வழங்குவதற்கு முடியும் என்பதுடன், அந்த அதிகபட்ச வரம்பைத் தாண்டும்போது, கொள்-முதல் செயல்முறையைப் பின்பற்றுதல் வேண்டும். இருப்பினும், குறித்த இரண்டு சந்தர்ப்பங்களில், வரம்புகளை மீறி செயல்படுவதற்காக, நிமித்தக் கட்டுநிதி பெறப்பட்ட பணியினை, இரண்டு பணிகளாகப் பிரிக்கப்பட்டு, இரண்டு அலுவலர்களுக்கு, இரண்டு சந்தர்ப்பங்களாக ரூபா.124,000 மற்றும் ரூபா.190,000 என்ற வகையில் கட்டுநிதி வழங்கப்பட்டுள்ளன. | எதிர்வருங் காலங்களில் செவ்வையாக்குவதற்கு குறித்துக்கொண்டேன். | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு ஒழுங் கமைதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

மீளாய்விற்கான ஆண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா. 3,346,928,257 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா.2,400,069,243 ஆகும். அதன்படி நிதிசார் விளைவுகளின் ரூபா.946,859,014 வளர்ச்சி காணப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு அபராத வருவாய் ரூபா.863,146,555 ஆன அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மதிப்பாய்வு ஆண்டில், பட்டப்பின் படிப்பு கற்கைநெறியை கற்ற 49 சுங்கதுறை அலுவலர்களுக்காக, ரூபா. 19,350,000 ஆன தொகை நிதியத்தால் மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த மீளளிப்புகளுக்கு ஏற்புடையதாக, 48 அலுவலர்-களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைகளின் மூலப் | பட்டப்பின் படிப்பு கற்ற அலுவலர்களுடன் ஏற்படுத்திக்-கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் மனிதவள மேம்பாட்டுத் துறையில் ஏற்புடைய அலுவலர் பொருட்டு திறக்கப்படும் கடிதக்கோவையில் உள்ளடக்கப்படும். எதிர்வரும் காலங்களில் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளின் மூலப் பிரதியும் உரிய அலுவலர்களின் சுயவிபரக் கோவைகளில் உள்ளடக்குவதற்காக மனிதவள முகாமைத்துவ பிரிவிடம் | உடன்படிக் கைகளின் மூலப் பிரதிகள் மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைநெறி சான்றிதழ்களின் பிரதிகள் உரிய அலுவலர்களின் சுயவிபரக் கோவைகளில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதிகள் மற்றும் 27 அலுவல்களுக்கு ஏற்புடையதான கற்கைநெறி சான்றிதழ்களின் பிரதிகள் தனிப்பட்ட கோப்புகளில் உள்ளடக்குவதற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கு-வதற்கு குறித்துக்கொண்டேன். பட்டப்பின் படிப்பு கற்கும் அலுவலர்களால் கற்கைநெறி கட்டணங்களை மீளளிக்கும் போது வழங்கும் பட்டப்பின் படிப்பு சான்றிதழ்களின் பிரதியும் உரிய பல்கலைக்கழகத்தால் வழங்கும் உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரதியும் சகிதம் அந்த அலுவலர்களின் சுயவிபரக் கோவையில் சேர்ப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என்பதை மேலும் தயவுடன் அறியத் தருகின்றேன். | |
| (ஆ) | சுங்க வரி தொடர்பான மோசடிகளை கட்டுப்படுத்து-வதற்காக செயற்கை நுண்ணறிவுடன் கூடிய மேம்பட்ட முறைகளை அறிமுகப்படுத்-துவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்காததாலும், அலுவலர்-களின் பொதுவான கடமை-களில் கண்டறியப்படும் பல்வேறு சுங்க மீறல்களுக்கு அதிகமாகப் பரிசுகள் வழங்கியதாலும், கண்டறியப்படும் அனைத்து சுங்க மீறல்களுக்கும் 20% வீதம் நிதியத்திடம் வரவு வைக்கப்-பட்டதன் காரணமாகவும், நிதியம் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்துள்ளது. | சுங்க வரி மோசடிகளைக் கட்டுப்படுத்துவதற்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது ஒரு நேர்மறையான நடவடிக்கை-யாகும். இருப்பினும், சுங்க அலுவலர்களின் தனித்துவமான திறன்கள், அறிவு மற்றும் அனுபவம் ஆகியவை சுங்க வரி தொடர்பான தவறுகள் மற்றும் மோசடிகளைக் கண்டறிவதில் பயன்படுத்தப்படு-கின்றன. மேலும், சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் திணைக்களத்து கட்டளைகளின் பிரகாரம் பணத்தொகை இந்த நிதியத்திடம் வரவு வைக்கப்படு-கிறது. சுங்க வரி தொடர்பான மோசடிகள் அல்லது தடை-செய்யப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வருவதைத் தடுப்பதற்காக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சாதகமான முறை யாதெனில், அலுவலர்-களுக்கு அல்லது உளவாளி-களுக்கு அன்பளிப்புகளை வழங்குவதாகும். இதில் தொடர்புடைய அன்பளிப்பு பணத்தை வழங்கும் போது கடமையின் தன்மை கவனிக்கப்படமாட்டாது. | சுங்க வரி தொடர்பான மோசடிகளை கட்டுப்படுத்துவத-ற்கு நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல் வேண்டும். |
| (இ) | சில சமயங்களில், மோசடி செய்ய முயற்சித்த பொருட்கள் மற்றும் வரி மதிப்பிற்கு ஒப்பீட்டு அளவில் மூன்றில் ஒரு பங்கு அபராதம் விதித்தல், சுங்க விதிமீறல்களில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்படாமை, தற்போதைய தாராளமய பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்கு ஏற்ப சுங்கச் சட்டம் மற்றும் தொடர்புடைய | தற்போதைய தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறை சிக்கலாகியுள்ளது. இந்தச் சிக்கலானது, இறக்குமதிப் பொருட்களைக் கையாளும்போதே சுங்க விதிமீறல்களைக் கண்டறியும் வாய்ப்பைக் குறைக்கின்றது. தற்போது உலகளவில் ஏற்றுக்-கொள்ளப்பட்ட நடைமுறை, "சுங்கத்திற்குப் பின்னரான கணக்காய்வு" ஆகும். (Post audit) | அபராதங்கள் மற்றும் பறிமுதல்களுக்கு மேலதிகமாக சுங்க தவறுகளை கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான புதிய முறைகளை தாபித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியங்களின் சட்ட விதிகளை முறையாகவும் காலத்திற்கேற்பவும் திருத்தாமை ஆகியன காரணமாக, அபராதங்கள் மற்றும் பறிமுதல்கள் மூலம் சுங்க விதிமீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இயலாதிருந்துள்ளது. | இதற்கான ஏற்பாடுகள் சுங்கச் சட்டத்தில் உள்ளன.<br><br>சுங்க மோசடி குற்றங்களுக்கு, பொருட்களின் மதிப்பை விட மூன்று மடங்கு வரை அபராதம் விதிக்கப்படுகிறது. மேலும், அதிக அளவிலான மோசடிகளைக் கண்டறிந்து அதற்கான அபராதங்கள்/பறிமுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது, துறையின் செயல்திறனுக்கும் வருவாய் இலக்குகளை அடைவதற்கும் பெரிதும் பங்களித்துள்ளது.<br><br>அபராதத் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் இந்த நிதியத்தில் சேர்க்கப்படும் நிலையில், அபராத வருவாய் அதிகரிப்புக்கு ஏற்ப நிதியத்தில் சேரும் தொகையும், அதன் மூலம் அரசாங்கத்தின் வருவாயும் அதிகரிப்பது ஒரு நேர்மறையான நிலையாகும். | |
| (ஈ) | சுங்க அதிகாரிகளின் கடமைகளின் போது ஏற்படும் விபத்துகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நிதியளிப்பதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தாலும், கடந்த 12 ஆண்டுகளில் இதுபோன்ற எந்தவொரு இழப்பீடும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன் | நிதியத்திடம் ஒதுக்கப்பட்டுள்ள சதவீதம், மீண்டும் மீளாய்வு செய்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ) | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும், கடந்த 5 ஆண்டுகளிலும் திரட்டப்பட்ட மொத்த வருவாய் ரூபா. 8,823,186,266 ஆகும். இந்தக் காலகட்டத்தில், நிதியிலிருந்து (தேய்மானம் தவிர்த்து) செலவிடப்பட்ட தொகை ரூபா. 240,493,766 ஆகும். இதன்படி, மொத்த வருவாயில் சுமார் 3% மட்டுமே செலவிடப்பட்டு, 97% நிதியத்தில் திரட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக, நிதிக்கு ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் தொகை குறித்து மீளாய்வு செய்தல் வேண்டும் | அவதானிப்புடன் இணங்குகின்றேன் | நிதியத்திடம் ஒதுக்கப்பட்டுள்ள சதவீதம், மீண்டும் மீளாய்வு செய்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், நிதியத்தின் செலவினங்கள் தொடர்பாக உண்மையான மற்றும் வரவு | **<u>உள்நாட்டு பயிற்சி செலவுகள்</u>**<br><br>திட்டமிடப்பட்ட சில உள்நாட்டு கற்கைநெறிகள் எதிர்பார்த்தபடி | இயன்ற வரை உண்மையான பெறுமதிகளுக்கு அண்மிக்கும் |

செலவுத் திட்டத் தரவுகளைக் கருத்தில் கொள்ளும்போது, மூன்று செலவின உருப்படிகளின் மதிப்பிடப்பட்ட மதிப்புகள் உண்மையான மதிப்புகளை விட 64% முதல் 72% வரையிலும், வருவாய் உருப்படிகள் 54% வரையிலும் அதிகமாக மதிப்பிடப்பட்டிருந்தன. இதன் காரணமாக, வரவு செலவுத் திட்டம் ஒரு பயனுள்ள முகாமைத்துவ மற்றும் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை.

நடத்தப்படாததால், உள்நாட்டுப் பயிற்சி செலவுகள் மதிப்பிடப்பட்ட செலவை விட குறைவாகவே உள்ளன. பயிற்சித் தேவைகள் குறித்த ஆய்வில் இந்த கற்கைகள் கண்டறியப்பட்டாலும், சில சமயங்களில் அலுவலர்களிட-மிருந்து பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வராததும், எதிர்பார்த்ததை விட குறைவான அலுவலர்களே பங்கேற்றலும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

**<u>வெளிநாட்டு பயிற்சி செலவுகள்</u>**

அதேபோல், முன்னரான ஆண்டை விட வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகள் குறைந்ததாலும், சுங்க அலுவலர்கள் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியிலிருந்து செலவிட வேண்டிய சில வெளிநாட்டுப் பயிற்சிப் கற்கை-நெறிகளுக்கு சுங்க பணிப்பாளர் நாயகத்தால் நிதி அமைச்சகத்திடம் அனுமதி கோரப்படினும், அனுமதி கிடைக்காமையும் வெளிநாட்டுப் பயிற்சி செலவுகள் மதிப்பிடப்பட்ட செலவை விடக் குறைவாக அமைவதற்கு காரணமாகியுள்ளது.

கணக்காய்வால் சுட்டிக்காட்டப்பட்ட வரவு செலவு பதிவேட்டின் கட்டுப்பாடு தொடர்பான ஏனைய அவதானிப்புகளை, எதிர்காலத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யப் பதிவு செய்துகொண்டேன்.

**<u>பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைத்த வருவாய்</u>**

பல்வேறு துறைகளால் விற்பனைக்காக மத்திய அகற்றல் பிரிவிற்கு அனுப்பப்படும் பொருட்கள் தாமதமின்றி கேள்விகள் மூலம் விற்பனைக்கு அளிக்கப்படுகின்றன. மத்திய மதிப்பீட்டுத் துறையால் வழங்கப்படும் மதிப்பீட்டை விட அதிகபட்ச விலைமனுவை முன்வைக்கும் ஏலதாரருக்கு விற்பனை செய்யப்படும்.

வகையில் மதிப்பீடுகளை தயாரிப்பதன் மூலம் வரவு செலவு பதிவேடை முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | ஒரு வருடத்தில் ஏனைய பிரிவுகளால் அதிக அளவு பொருட்கள் மத்திய அகற்றல் பிரிவிடம் அனுப்பப்பட்டால், அதிக வருவாய் ஈட்ட வாய்ப்பு கிடைக்கும். | |
| (எ) | மீளாய்விற்கான ஆண்டில் விளையாட்டு மற்றும் உடல் தகுதி நடவடிக்கைகளுக்காக வருடாந்த வரவு செலவு ஒதுக்கீட்டில் ரூபா.4,000,000 ஒதுக்கப்பட்ட போதிலும், இந்த ஆண்டு முழுவதும் இந்த நிதியிலிருந்து எந்த செலவும் செய்யப்படவில்லை. | இது தொடர்பாக தேடிப்பார்த்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக்கொண்டேன். | நிதியத்தில் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை மீண்டும் மீளாய்வு செய்து வரவு செலவு மதிப்பீடுகளை தயாரித்தல் வேண்டும். |